யா/தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை
தெல்லிப்பளை

# Principal Report

# அதிபர் அறிக்கை

## 2018.05.26

## பரிசளிப்பு விழா – 2018

PrizeGiving

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை
தெல்லிப்பளை

**மகுடவாசகம்**

## மெய்ப்பொருள் காண்பதறிவு

எமது பாடசாலையின்

## தூரநோக்கு Vision

நாட்டின் அபிவிருத்திக்கு உதவக்கூடிய நல்லொழுக்கமும் அறிவும் கொண்ட மாணவர்களை உருவாக்கி சமூகத்திற்கு வழங்குதல்

எமது பாடசாலையின்

## நோக்கக் கூற்று Mission

சிறப்பான கல்வி, விளையாட்டு ஆகியவற்றை மாணவர்களுக்கு வழங்கி நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய ஒழுக்கமுள்ள ஆளுமையுடன் கூடிய மாணவர் சமூகத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை தெல்லிப்பளை

# நிறுவுநர் நினைவு தினமும்

# பரிசளிப்பு விழாவும் - 2018

**இடம் : பாடசாலைப் பிரதான மண்டபம்**
**காலம் : 26.05.2018 சனிக்கிழமை**
**நேரம் : மு. ப 9.00 மணி**

தலைமை
**திரு சு. திருச்செல்வம் (அதிபர்)**

பிரதம விருந்தினர்
**திருவாளர்.மா.ஆனந்தகுமார்**
கோட்டக் கல்விப்பணிப்பாளர் - தெல்லிப்பளை

சிறப்பு விருந்தினர்
**திருவாளர் க.கனகேஸ்வரன்**
உ.க.ப முறைசாராக்கல்வி - வலிகாமம்

கௌரவ விருந்தினர்
**செல்வி மு.விஜிதா**
கிராம அலுவலர் - துர்க்காபுரம்

நினைவுப் பேருரை
**திருமதி.லீலாவதி அருளையா**
ஓய்வுநிலை அதிபர்

ஆசியுரை
பிரம்மஸ்ரீ கி கணேசமூர்த்திசர்மா
பிரதமகுரு – தோதரவை அம்மன் தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- மங்கல வளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்புரை
- ஆசியுரை பிரம்மஸ்ரீ கி கணேசமூர்த்திசர்மா
- தலைமையுரை திரு.கு.திருச்செல்வம் (அதிபர்)
- நிறுவுநர் வணக்கம்
- நிறுவுநர் நினைவுப் பேருரை திருமதி.லீலாவதி அருளையா (ஓய்வுநிலை அதிபர்)
- விருந்தினர்கள் உரை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில்கள் வழங்கல்
- கலைநிகழ்வுகள்
- நன்றியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை
தெல்லிப்பளை

**நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் - 2018**

# அதிபர் அறிக்கை

நிறுவுனர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் சிறப்புற எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை பணிந்து வணங்கி, எமது வித்தியாசாலையின் ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ சுந்தர மூர்த்தி ஐயர் அவர்களை மனத்தில் நினைத்து வணங்கி அதிபர் அறிக்கையினைத் தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருவாளர்.மா.ஆனந்தகுமார் (கோட்டக் கல்விப்பணிப்பாளர் - தெல்லிப்பளை) அவர்களே சிறப்பு விருந்தினராக கலந்து எம்மை பெருமைப்படுத்தும் திருவாளர் க.கனகேஸ்வரன் (உ.க.ப முறைசாராக்கல்வி– வலிகாமம்) அவர்களே, கௌரவ விருந்தினர் செல்வி மு.விஜிதா (கிராம அலுவலர் - துர்க்காபுரம்) அவர்களே, ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் பிரம்மஸ்ரீ கி கணேசமூர்த்திசர்மா (பிரதமகுரு – தோதரவை அம்மன் தேவஸ்தானம்) அவர்களே, நினைவுப் பேருரை நிகழ்த்த வந்திருக்கும் திருமதி.லீலாவதி அருளையா (ஓய்வுநிலைஅதிபர) அவர்களே, அயற் பாடசாலை அதிபர்களே ஆசிரியர்களே எமது வித்தியாசாலையின் உபஅதிபர், ஆசிரியர்களே மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பனர்களே பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே கல்வி சாரா ஊழியர்களே மாணவர்களே அனைவருக்கும் எனது அன்புசால் வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று வைகாசி 26ஆம் திகதி எமது வித்தியாசாலையின் ஜனன தினத்திலே வித்தியாசாலையை நிறுவி கல்விப் பணியை தொடக்கி வைத்த சைவப் பெரியாரும் அந்தணர் குலத் தோன்றலுமாகிய பிரம்மஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐயா அவர்களின் பணிதனை நினைந்து அவர்களுக்கு நன்றி செலுத்துவதுடன் இங்கு கல்வி பெற்று சிறப்புற்று முதல் நலையில் மளிரும் மாணவர்களை ஊக்குவித்து உட்சாகப்படுத்தும் முகமாக பரிசளித்து கௌரவிப்பதற்காக இங்கு நாம் கூடியுள்ளோம். அந்நிய ஆதிக்க காலத்தில் பின்னிலை தங்கிய சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் திண்ணிய நோக்குடன் ஐயா அவர்களால் பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் இன்று வரை அயராது கல்விப்பணியாற்றிவரும் எமது வித்தியாசாலையின் வளர்ச்சிப் பாதையினை சற்று நினவு கூர்தல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையிலே 1900 ஆண்டு திண்ணைப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை 1901 அரசினர் உதவிநன்கொடை பெறும் பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து 1902 ஆம் ஆண்டு முதன்முதலாக வருடாந்தப் பரீட்சை நடாத்தப்பட்டது. தொடர்ந்து வளர்ச்சிப் பாதையிலே 1921 இல் முகாமைக்குவப் பொறுப்புக்கள் திரு.தெ.து. துரையப்பாப்பிள்ளையிடம் ஒப்படைக்கப்பட்டது. 1928 ஆம் ஆண்டு பாடசாலை புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது. அதே ஆண்டில் பாலர் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1933 ஆம் ஆண்டு J.S.C வகுப்பும் 1943 இல் S.S.C வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து பல்வேறு காலகட்டங்களிலும் பல்றேு கட்டட தளபாட வளங்களையும் பெற்று பாடசாலை சீரிய வளர்ச்சிப் பாதையிலே வளர்ந்து கொண்டிருந்தது. அதற்கேற்ப மாணவர்கள் பாட அடைவிலும் இணைப்பாட விதானத்திலும் உயர் பெறுபேறுகளை ஈட்டினர். இந்நிலையில் 1995 இல் ஏற்பட்ட யாழ்ப்பாண இடப்பெயர்வில் பாடசாலையும் முழுமையாக இடம் பெயர்ந்தது. மக்களின் இடப்பெயர்வினால் பாடசாலை மாணவர் வளத்தில் ஓர் வீழ்ச்சி நிலையை எதிர்கொண்டது.

வளர்ச்சிக் காலத்தில் 500 வரையான மாணவர்களைக் கொண்டிருந்த பாடசாலை இடப்பெயர்வின் பின்னர் நூறு வரையான மாணவர்கள் மட்டும் கொண்டதாக காணப்படுகிறது. எனினும் பாடசாலை கட்டட தளபாடங்கள், ஆசிரிய ஆளணி வளங்கள் உயர் நிலையில் காணப்படுவதுடன் மாணவர்களை நிறைவான கற்றல் செயற்பாட்டுடன் இணைப்பாட விதான வழிகாட்டலிலும் ஆசிரியர்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர். புதிய மாடிக் கட்டடத்தில் பிரார்த்தனை மண்டபத்துடன் கூடிய அடைக்கப்பட்ட வகுப்பறைகளும் கொண்டதாக பாடசாலை கட்டட தளபாடங்களில் நறைவான நிலையில் காணப்படுகிறது.

மேலும் பாடசாலையின் கணினி கற்கை நிலையம் நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடம், என்பன சிறப்பாக செயற்பட்டு மாணவர்களின் கற்றலுக்கும் இணைப்பாடவிதான அபிவிருத்திக்கும் பயன்படுகின்றன.

**கணினி கற்கை நிலையம்** : 5 கணினிகள் மாணவர் கற்றலுக்குப் பயன்படுவதுடன் கணினிக் கல்வியை ஆசிரியர் திருமதி சுமங்கலி உமாகரன் வழங்கி வருகிறார்

**நூலகம்** : மாணவர்களின் பாட விடயங்களுக்கும் பொது அறிவு விருத்திக்கும் பயன்படும் விதமான 700 தமிழ் நூல்களும், 205 ஆங்கில மொழி நுல்களும் உள்ளன. நூலகப் பொறுப்பாசிரியராக திருமதி சறோஜாதேவி குலசேகரம் செயற்பட்டு வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஞ்ஞான ஆய்வுகூடம்** : எமது இடைநிலை வகுப்பு மாணவர்களின் விஞ்ஞான பாட செயன்முறை வேலைகளுக்கு ஏற்ற வகையில் காணப்படுகிறது. எனினும் உரிய செயற்பாட்டு மேசைகள் தளபாடங்களின் பற்றாக்குறை காணப்படினும் விஞ்ஞான பாட ஆசிரியர் திருமதி சந்திரிகா சுதர்சனனின் வழிகாட்டலில் விஞ்ஞான பாட செயன்முறை வேலைகள் செயற்படுத்தப்படுகின்றன.

மேலும் சங்கீத நடன பாடங்களுக்கு தனியான அறைகள் இல்லாத போதிலும் எமது ஆசிரியர்கள் இருக்கும் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி மாணவர்களுக்கான அழகியல் பாடத்துடன் இணைப்பாட விதான செயற்பாடுகளையும் செயற்படுத்துகின்றனர்.

## ஆசிரியர் ஆளணி விபரம் - 2018


| இல | ஆசிரியர் பெயர் | பதவியும் தரமும் | கற்பிக்கும் பாடம் |
|---|---|---|---|
| 01 | திரு.கு.திருச்செல்வம் Med | அதிபர், | |
| 02 | திரு.இ.சேதுநாதன் Bed | பிரதி அதிபர் 23.06.2017வரை | விஞ்ஞானம் |
| 03 | திருமதி.ச.குலசேகரம் BA | பிரதி அதிபர் 24.06.2017முதல் | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 04 | திரு.பூ.அகிலலோகநாயகம் Bsc | ஆசிரியர் -1 | கணிதம் |
| 05 | செல்வி.சி.சுகந்தகுமாரி BA | ஆசிரியர் 2-I | தமிழ் |
| 06 | திருமதி.தே.அன்ரன்கிறேசியன் B.Com | ஆசிரியர் 2-I | தரம் - 5 |
| 07 | திருமதி.சு.வைத்திலிங்கம் BA | ஆசிரியர் 2-II | தரம் - 1,2 |
| 08 | திருமதி.மை.கிருதரன் BA | ஆசிரியர் 2-II | தரம் - 3 |
| 09 | திருமதி.வா.மணிவண்ணன் | ஆசிரியர் 2-II | சமூகக்கல்வி |
| 10 | திருமதி.சு.உமாகரன் BA | ஆசிரியர் 2-II | சைவசமயம் |
| 11 | திருமதி.சு.நிஷாந்தன் BA | ஆசிரியர் 2-II | தரம் -4 |
| 12 | செல்வி.சொ.கௌதமி BFA | ஆசிரியர் 3-I | நடனம் பகுதி நேரம் |
| 13 | செல்வி.ப.தர்சிகா | ஆசிரியர் 2-II | சங்கீதம் |
| 14 | செல்வி.அ.மயூரி HNDE | ஆசிரியர் 3-I | ஆங்கிலம் |
| 15 | திருமதி.ச.சுதர்சனன் | ஆசிரியர் 2-II | விஞ்ஞானம் |
| 16 | திரு.சி.அருளானந்தசிவம் | ஆசிரியர் | ஆங்கிலம் பகுதி நேரம் |
| 17 | திரு.மா.கருணா | காவலாளி | கல்விசாரா ஊழியர் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் தொகை கடந்த 10 வருடங்களில் (2008 - 2017)

| ஆண்டு | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தரம் 1 - 5 | 30 | 30 | 47 | 46 | 46 | 43 | 36 | 34 | 28 | 27 |
| தரம் 6 - 11 | 60 | 62 | 56 | 59 | 53 | 38 | 47 | 51 | 39 | 44 |
| மொத்தம் | 90 | 92 | 103 | 105 | 99 | 81 | 83 | 85 | 67 | 71 |











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு கடந்த 10 வருடங்கள் (2008 - 2017 வரை)

| ஆண்டு | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தோற்றியோர் | 9 | 9 | 5 | 7 | 8 | 8 | 8 | 11 | 7 | 7 |
| ≥ 70புள்ளி | 3 | 4 | 3 | 5 | 7 | 6 | 4 | 5 | 4 | 6 |
| சித்தி வீதம் 70புள்ளி | 33.3 | 44.4 | 60.0 | 71.4 | 87.5 | 75.0 | 50.0 | 45.5 | 57.1 | 85.7 |
| ≥ 100புள்ளி | 0 | 2 | 2 | 1 | 4 | 4 | 3 | 2 | 2 | 1 |
| சித்தி வீதம் 100புள்ளி | 0.0 | 22.2 | 40.0 | 14.3 | 50.0 | 50.0 | 37.5 | 18.2 | 28.6 | 14.3 |
| வெட்டுப் புள்ளி சித்தி | 0 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த(சா/த) பரீட்சை பெறுபேறு கடந்த 10 வருடங்கள் (2008 - 2017 வரை)

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தோற்றியோர் | 9 | 18 | 5 | 7 | 3 | 5 | 8 | 6 | 5 | 6 |
| தமிழ் சித்தி | 8 | 11 | 3 | 7 | 3 | 5 | 7 | 5 | 4 | 6 |
| சித்தி வீதம் | 88.9 | 61.1 | 60.0 | 100.0 | 100.0 | 100.0 | 87.5 | 83.3 | 80.0 | 100.0 |
| கணிதம் சித்தி | 5 | 5 | 4 | 7 | 0 | 2 | 3 | 2 | 1 | 3 |
| சித்தி வீதம் | 55.6 | 27.8 | 80.0 | 100.0 | 0.0 | 40.0 | 37.5 | 33.3 | 20.0 | 50.0 |
| உயர்தர தகுதி | 5 | 3 | 4 | 6 | 0 | 2 | 3 | 2 | 1 | 4 |
| சித்தி வீதம் | 55.6 | 16.7 | 80.0 | 85.7 | 0.0 | 40.0 | 37.5 | 33.3 | 20.0 | 66.7 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாடவிதான செயற்பாடுகள் - 2017

**விளையாட்டுத்துறை :-**

பாடசாலையில் விளையாட்டுப்பாட ஆசிரியர் இல்லாத நிலையிலும் கலைப் பட்டதாரி ஆசிரியர் திருமதி. ச. குலசேகரம் சுகாதார உடற்கல்வி ஆசிரியராகவும் திருமதி. மைதலி. கிருதரன் விளையாட்டுப் பொறுப் பாசிரியராகவும் செயற்படுகின்றனர். பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. அதில் பாடசாலையின் அனைத்து மாணவர்களும் பங்குபற்றிப் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர். திறமை காட்டிய மாணவர்கள் கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றினர்.

**போட்டிகள் :-**

பாடசாலை மட்டத்தில் தமிழ்த் தினம் எளிய முறையில் நடாத்தப்பட்டு சிறந்த மாணவர்கள் கோட்ட மட்ட போட்டியில் பங்குபற்றினர். ஆரம்பப் பிரிவு மாணவர்கள் விரைவு கணிதப் போட்டி, "செயற்பட்டு மகிழ்வோம்" மற்றும் ஆங்கில மொழி தினப் போட்டிகள் சமூக விஞ்ஞானப் போட்டிகள் கணிதப் புதிர்ப் போட்டிகள் பொது அறிவுப் போட்டிகள் என்பவற்றிற்கு மாணவர்கள் பங்குபற்றுவதற்கு வழிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சைவபரிபாலன சபையின் பரீட்சையில் அனைத்து மாணவர்களும் தமிழ் மொழி, சைவசமயப் பாடங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வழிப்படுத்தப்பட்டனர்.

**பாடசாலை நிர்வாக செயற்பாடுகள் :-**

பாடசாலை அதிபர், ஆசிரியருடன் இணைந்த பாடசாலை முகாமைத்துவ அணியின் சீரான வழிகாட்டலில் நிர்வாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. 2017ஆம் ஆண்டிற்கான S.L.I.C செயற்றிட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் உயர் மட்ட செயற்பாடுகளான ஆசிரியமட்ட, மாணவர் மட்ட நிதிகள் உரிய வகையில் மாணவர்கள் பயன்படும் விதமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. தரம் 05 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள் தரம் 11 மாணவர்கள் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள், மெல்லக் கற்போர்களுக்கான எழுத்தறிவூட்டல் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

**முகாமைத்துவக் குழு (S.M.T) – 2017**

1. தலைவர் :- திரு. கு. திருச்செல்வம் (அதிபர்)
2. உபதலைவர்:- திரு. இ. சேதுநாதன் (பிரதி அதிபர் - 23.06.2017வரை)
   திருமதி. ச. குலசேகரம் (பிரதி அதிபர் - 23.06.2017முதல்)
3. திருமதி. தே. த. அன்ரன்கிறேசியன்
4. செல்வி. சி. சுகந்தகுமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திக் குழு (S.D.C) – 2017

1. தலைவர் :- திரு. கு. திருச்செல்வம் (அதிபர்)
2. உப தலைவர் :- திரு. இ. சேதுநாதன் (பிரதி அதிபர் - 23.06.2017வரை)
   திருமதி. ச. குலசேகரம் (பிரதி அதிபர் - 23.06.2017முதல்)
3. செயலாளர் :- திருமதி. சு. ஜெயலட்சமி
4. இணைச் செயலாளர் :- திருமதி. சு. வைத்திலிங்கம்
5. பொருளாளர் :- திருமதி. தே. த. அன்ரன்கிறேசியன்

உறுப்பினர்கள் :-

1. திருமதி. மை. கிருதரன்.
2. திருமதி. கி. சவராணி.
3. திருமதி. க. சுசீகலா.
4. திருமதி. ரா. கவிதா
5. திரு. சு. வரதராஜசர்மா
6. திரு. சி. அருளானந்தசிவம்

## சுகாதார மேம்பாட்டுக் குழு – 2018

1. திரு. கு. திருச்செல்வம்
2. திருமதி. ச. குலசேகரம்
3. திருமதி. வா. மணிவண்ணன்
4. திருமதி. ச. சுதர்சனன்
5. செல்வன். சி. சுதர்சன்
6. செல்வன். நி. வேந்தன்
7. செல்வி. கா. சங்கவி
8. செல்வி. கி. டர்சிகா
9. செல்வி. ப. ரஜீனகா

## கட்டாயக் கல்விக் குழு - 2018

1. திரு. கு. திருச்செல்வம் (அதிபர்)
2. திருமதி. ச. குலசேகரம் (உபஅதிபர்)
3. திருமதி. சு. வைத்திலிங்கம் (ஆசிரியர்)
4. திரு. சி. அருளானந்தசிவம்
5. திருமதி. சு. ஜெயலட்சுமி
6. திரு. சு. முருகையா
7. திருமதி. கி. சிவராணி
8. செல்வி. மு. விஜிதா (கிராம உத்தியோகத்தர்)
9. திரு. த. கிஷோர் (சமுர்த்தி உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவர் சங்கம் :-

பாடசாலையில் பழைய மாணவர் சங்கம் அதிபர் தலைமையில் திருமதி லீலாவதி அருளையா செயலாளராகவும் திருமதி வா மணிவண்ணன் பொருளாளராகவும் செயற்பட்டுவருகின்றார்கள். பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் விளையாட்டு விழா பரிசு தினம் என்பவற்றிலும் இணைப்பாடவிதான நிகழ்வுகளிலும் பழைய மாணவர் சங்கத்தினர் நிதி, மற்றும் உடல் ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றனர். எமது பாடசாலையின் மின் மோட்டார் களவு போன நிலையில் ப.ம.ச. செயலாளர் திருமதி லீலாவதி அருளையா அவர்களால் புதிய மின் மோட்டார் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மேலும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர் கல்வி மேம்பாட்டிற்கும் மேற்படி குழுக்களும் உரிய ஒத்துழைப்பும் அனுசரணையும் வழங்கி செயற்படுகின்றனர்.

2017ல் S.L.I.G நிதியில் தரம் 05 மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் செயற்படுத்தப்படுகின்றன. இல்ல விளையாட்டுப் போட்டிக்காக துர்க்காதேவிதேவஸ்தானம், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் நிதியுதவி செய்துள்ளன. மேலும் பரிசளிப்பு நிகழ்வுக்காக அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பழைய மாணவர் திரு. க. கருணகரன் தமது பெற்றோர்களான அமரர் திரு தருமதி விநாயகமூர்த்தி சுப்பையா அவர்களின் நினைவாக 20 000 /= நிதியுதவியை வழங்கிவருகின்றார். அந்த வகையில் பாடசாலைக்கு ஒத்துழைப்பும், உதவியும் வழங்கும் சமூக நிறுவனங்களும் பெற்றோர், பழைய மாணவர்களுக்கும் அதிபர் என்ற வகையில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது அவசிய தேவைகளாக இனங்காணப்பட்ட பின்வுவரும் விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

1. சிறுவர் விளையாட்டு முற்றம் புனரமைப்பு
2. விஞ்ஞான ஆய்வுகூட தளபாடங்கள் கொள்வனவு
3. பாடசாலை சுற்று மதில் 150 அடி அமைத்தல்
4. செயற்பாட்டறை, அழகியல்(சங்கீதம் நடனம்) கூடம்
5. குடி நீர் வசதி
6. பழைய கிணறு சுத்திகரிக்கப்பட்டு கிணற்றை முற்றாக மூடி கொங்கிறீற் இடப்படல்

எனும் தேவைகள் இனங்காணப்பட்டு இவற்றுக்கான முன்மொளிவுகள் எமது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பயிற்சி நிலையம்

எமது வித்தியாசாலையில் கல்விகற்று வெளியேறிய மாணவர்களின் தொழில் வழிகாட்டலை நோக்காகக் கொண்டு தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு இந்தப் பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியை நிறவுசெய்த யுவதிகளுக்கான தொழிற் பயிற்சியாகத் தையல் பயிற்சி வகுப்புகள் இடம் பெறுகின்றன. இதனையும் நல்ல முறையில் பயன்படுத்தி இளய தலைமுறையினர் தொழிற்தேர்ச்சிபெற வேண்டும். இதற்காக வலயக்கல்விப் பணிப்பாளருக்கும், வலய முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், வலய அலுவலர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிறைவாக எமது இன்றய பரிசளிப்பு வழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் திருவாளர்.மா.ஆனந்தகுமார் (கோட்டக் கல்விப்பணிப்பாளர் - தெல்லிப்பளை) அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். அதேபோல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் திருவாளர் க.கனகேஸ்வரன் (உ.க.ப முறைசாராக்கல்வி– வலிகாமம்) அவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள் மேலும் கௌரவ விருந்தினர் செல்வி மு.விஜிதா (கிராம அலுவலர் - துர்க்காபுரம்) அவர்களுக்கும், ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் பிரம்மஸ்ரீ கி கணேசமூர்த்திசர்மா (பிரதமகுரு – தோதரவை அம்மன் தேவஸ்தானம்) அவர்களுக்கும் , நினைவுப் பேருரை நிகழ்த்த வந்திருக்கும் திருமதி.லீலாவதி அருளையா (ஓய்வுநிலைஅதிபர்) அவர்களுக்கும், அயற் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் எமது வித்தியாசாலையின் உபஅதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பனர்கள் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் கல்வி சாரா ஊழியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் எனது சிரந்தாழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இன்றய விழாவிற்கு மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கி வழிப்படுத்திய சங்கீத நடன பாட ஆசிவியர்கள் மற்றும் விழாக்குளுவிற்கும் ஒத்துளைப்பு வழங்கிய அனைத்து உள்ளங்களிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்து வரும் காலங்களிலும் இங்கு பயிலும் மாணவர்களின் கல்வி வருத்திக்காக தங்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பையும் உதவியையும் எதிர் பார்ப்பதுடன் பாடசாலையின் எதிர்கால வெற்றிக்கு அதிபர் ஆசிரிய குழாத்தின் முழுமையான முயற்சிகளையும் முன்னெடுப்போம் என உறுதி கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றிகள்

26.05.2018

அதிபர்

திரு. கு. திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசு பெறும் மாணவர் விபரம் :-

| தரம் | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| தரம் - 1 | க.அஸ்வினி | சைவசமயம் , தமிழ், கணிதம்□சுற்றாடல் |
| தரம் - 2 | ச.விதுஷன் | சைவசமயம் , தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம் |
| | உ.சேனுஜன் | சொல்வளம் |
| தரம் - 3 | கி.தீபிகா | சைவசமயம் ,தமிழ் , கணிதம் ,சுற்றாடல் , ஆங்கிலம் ,சிங்களம் |
| | நிவேதினி | சொல்வளம் |
| தரம் - 4 | லோ.லக்சனா | சைவசமயம் , சொல்வளம் |
| | ரா.சார்மி | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், |
| தரம் - 5 | ஞா. கோகுலன் | சைவசமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், சொல்வளம், |
| தரம் - 6 | ப. யதுசன் | சைவசமயம், தமிழ் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு குடியியுரிமை, சுகாதாரம், செய்முறைத் தொழிநுட்பம் சங்கீதம் |
| | த.விக்னேஸ்வரி | நடனம் |
| தரம் - 7 | க. அக்ஷனா | சைவசமயம், தமிழ், வரலாறு, புவியியல், குடியியுரிமை, சுகாதாரம், செய்முறைத் தொழில் நுட்பம், ஆங்கிலம் |
| | செ.மதுஷ்கன் | கணிதம் விஞ்ஞானம்□சங்கீதம் |
| | ரா. டிலக்ஷனா | புவியியல், நடனம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தரம் - 8 | ரா. டக்ஸ்சனா | சைவசமயம், தமிழ் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு குடியியுரிமை, சுகாதாரம், செய்முறைத் தொழிநுட்பம் சங்கீதம் |
| | செ. எழிலரசி | நடனம் |
| தரம் - 9 | க. டர்சிகா | சைவசமயம், தமிழ் கணிதம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு குடியியுரிமை, சுகாதாரம், செய்முறைத் தொழிநுட்பம் சங்கீதம் |
| | ப. றஜீனகா | தமிழ், ஆங்கிலம், செய்முறைத் தொழிநுட்பம், |
| தரம் - 10 | கா.சங்கவி | சைவசமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, சுகாதாரம், குடியுரிமை, நடனம் |
| தரம் - 11 | ச.சிறிகரன் | விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, சுகாதாரம், சங்கீதம் |
| | கி.யதுசன் | தமிழ், குடியியல் |
| | ஞா.சயந்தினி | சைவசமயம், நடனம். |
| | கு.தாட்சாயினி | கணிதம் |
| 2017 O/L | ச.சிறிகரன் | 2B,4C,2S |
| | கி.யதுசன் | A,B,4C,S |
| | கு.தாட்சாயினி | B,3C,2S |
| 2017 புலமைப் பரிசில் பரீட்சை | ஞா.கோகுலன் | 103 புள்ளி |
| கோட்ட மட்ட பரிசு பெறுபவர் விபரம் | ஞா.கோகுலன் | தனி இசை – 3ம் இடம் |
| | கா.சங்கவி | இலக்கணம் - 3ம் இடம் |
| | கி.தீபிகா | பக்திப் பாடல் - 3ம் இடம் |
| சிறந்த மாணவன் | ச.சிறிகரன் | இவர்களுக்குரிய பரிசினை அமரர் திரு. சின்னத்துரை ஞாபகார்த்தமாக சி.சிவகுமாரால் வழங்கப்படுகின்றது. |
| சிறந்த மாணவி | பு.சங்கீதா | |
| சிறந்க வரவொழுங்கு | கி.டர்சிகா | 192/197 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

**பல்லவி**

வாழ்த்துவோம் நாமே வையகந் தனிலே
வளர்மதி போல் வளர்க வென்றே (வாழ்க...)

**அனுபல்லவி**

தெல்லி கிழக்கில் சிறந்தே விளங்கும்
சைவப்பிரகாச வித்தியா சாலையை (வாழ்க...)

**சரணம்**

அந்தணர் குலத்தில் வந்தவதரித்த
சுந்தர மூர்த்தித் தோன்றல் தன்னையும்
சந்தமும் நாம் சிந்தையிலெண்ணும்
அந்தமில் சீர்துரையப்பா தன்னையும் (வாழ்க...)

வெய்யவனுதிக்க விரியுமம்புயம்
செய்ய சின்னமாய்ச் சிறந் தொளிரவும்
மெய்ப் பொருள் காண்டல் மெய்யறிவென்னும்
வைய்யகம் புகழும் வாய்மொழி வெல்லவும் (வாழ்க...)

சைவமும் தமிழுஞ் சாத்திரம் பலவும்
தெய்வ பக்தியும் சிறந்தே யிலங்க
மெய்மை யோடன்பு மேவிடும் முயற்சி
கைவர மாணவர் கதித்தே துலங்க (வாழ்க...)

பால்மணம் அறாத பாலகர் தமைப்
பாரினில் வாழப் பண்படுத் திடும்
சால்புறும் பாடசாலையாசிரியர்
மேலவர் புகழ மேன்மை யெய்திட (வாழ்க...)

வித்தியாசாலையை விருத்தி செய்தலே
உத்தம தொண்டாய் உள்ளத்திற் கொண்டிடும்
சத்தியன் ஆன்றோர் சாலவே புகழ
உத்தமன் ஜயரத்தினக் கோமானே (வாழ்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org